களஞ்சியம்
KALANJIYAM

# “இந்து சமயம் சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும்” – பூம்புகார் நகரத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு.

**பா.ஜேசினி மதுஷிகா,**

இந்துநாகரிகத்துறை,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

bjmadushika@gmail.com

**கலாநிதி (திருமதி) எஸ்.கேசவன்,**

சிரேஸ்ட விரிவுரையாளர் (G -1),

இந்துநாகரிகத்துறை,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
kesavans@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

தென்னாசியாவில் இந்தியா நீண்டதொடர்ச்சியாக வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட நாடாக விளங்குகின்றது. அந்தவகையில் இந்தியாவின் ஏராளமான இந்துசமயம் சார் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பூம்புகார் நகரத்தின் தொன்மையையும் தொடர்ச்சியான வரலாற்றை நிரூபிக்கும் வகையில் ஏராளமான தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டு இருந்தாலும் இந்நகரங்களைப் பற்றி முழுமையான விபரங்கள் வெளிக்கொணரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நகரை மேலும் அகழ்வாய்விற்கு உட்படுத்தும் போது தமிழரின் பெருமை உலகு அரங்கில் பேசப்படும். இவ்விடகளை அகழ்வாய்வு செய்யும் பொழுது பானை ஓடுகள், தெய்வச் சிலை உருவங்கள், செங்கற்கள், கருங்கல் சிற்பங்கள், மரச்சிற்பங்கள் எனப்பல பொருட்கள் கண்டறியப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சின்னங்கள் பூம்புகார் நகரத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன. இந் நகரங்களில் வாழ்ந்தவர்களது வாழ்க்கை முறை என்பவற்றை கூறுவதோடு இந் நகரங்கள் என்ன காரணத்தினால் அழிந்துத என்பது பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.

ஆரம்பகாலத்தில் இந்நகரின் விஸ்தரிப்பு ஏனைய நாடுகளுடன் இருந்தாலும் இன்று இந்நகரின் நிலை என்னவென்பதும் இந்நகரம் தமிழரின் பிறப்பிடமாக இருந்துள்ளது என்பதனை நிரூபிக்கவும், ஆய்வாளர்கள் தொழில்நுட்ப உதவிகொண்டும் கடலாய்வுகள் மேற்கொண்டும் அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் முறையும் கூறப்பட்டுள்ளது. அழிவடைந்து செல்லும் இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களின் மூலம் இவ்வழிந்த நகரின் வரலாற்றுத் தொன்மையினை வெளிக்கொணர்வதால் உலக வரலாற்றில் தமிழர்களிற்கான மதிப்பு உயரும்.

## திறவுச் சொற்கள்

பூம்புகார், அழிவடைந்த நகரங்கள், தொல் பொருட்கள், அகழ்வாய்வு

## ஆய்வு அறிமுகம்

வளத்துக்கும் வாணிபத்திற்கும் இந்தியா எப்பொழுதும் உலக மக்களின் கண்ணில் நிழலாடிக் கொண்டிருக்கிறது. மிகப் பழங்கால இந்துக்கள் தங்கள் வரலாறுகளை எழுதி வைத்திராவிடினும் பல இடங்களில் காணப்படும் சமாதிகள் மீதும் கற்கம்பங்கள் மீதும்

அப்பழங்கால மொழிகளில் பல செய்திகள் எழுதப்பட்டுள்ளன. அவர்களைப் பற்றிய சில குறிப்புக்கள் செவிவழியாக வந்து பிற்காலத்தில் தோன்றிய புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் எழுதப்பட்டுள்ளன. இப் பழங்கால மக்கள் நடத்திய போர்கள், கடல்கோள்கள் என்பவற்றால் பல நகரங்கள் அழிந்தமை போன்ற சில குறிப்புக்கள் பிற்கால மக்களின் கவனத்தினை ஈர்த்தன.

அழிவடைந்து செல்லும் இந்துசமயம் சார் தொல்லியல் சின்னங்கள் மூம் இவ்வழிந்த நகரத்தின் வரலாற்றுத் தொன்மையானது மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இவ் மரபுரிமைச் சின்னங்களை பேணி, எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சமூகத்திற்கு எடுத்துக்கூறுதல், இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களையும், அழிந்த இவ் பூம்புகார் நகரத்தையும் பற்றிய உண்மையான தகவலை மக்களிற்கு உணர்த்துதல் பழம் பெரும் வரலாற்றைக் கொண்ட தொல்லியல் சின்னங்களை ஆவணப்படுத்தல் என்பவற்றை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

இப் பூம்புகார் நகரம் அழிந்தமையினால் இதன் உண்மையான வரலாற்றை மக்கள் ஏற்க மறுக்கின்றனர். இந் நகரங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பற்றிய பாமர மக்கள் இன்றளவும் பெரிதும் அறிந்திலார். இந் நகரங்கள் பற்றிய இந்துக்கள் உண்மைத் தன்மையான வரலாறு இந்துக்களே அறியாவண்ணம் உள்ளது. இந்துக்களின் பெருமை இந்துக்களே அறியாவண்ணம் உள்ளமையினால் வேற்று மதங்கள் உரிமை கொண்டாட முன்வருவது எனப் பல விடயங்களை நாம் செய்திகள் ஊடாக நாளாந்தம் அறியக்கூடியதாகவும் உள்ளது.

**பூம்புகார்.**

**பூம்புகாரைப் போற்று வாராதலின் நாமும் பூம்புகாரைப் போற்றுவோம்** என்று இளங்கோவடிகளால் புகழப்பட்டது இந்நகரம். புகார் என்றால் ஆறு கடலில் சங்கமம் ஆகும் இடம் பூம்புகார் என்பது காவிரியாறு கடலில்புகும் இடம். இந்நகருக்கு **பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, புகழ் மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழபட்டினம், சபேரிஸ் எம்போரியம், கோலபட்டணம்** என்று பல பெயர்கள் உண்டு. அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல்களும், மிளிர்ந்தன, ஜாதகக் கதைகள். புத்தவம்சாத்தகதா முதலிய பிராகிருத நூல்களும், தாலமி எழுதிய பூமிநூல், பிளினி எழுதிய நூல், பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய் முதலிய வெளிநாட்டார் எழுதிய நூல்களும், கல் வெட்டுகளும் இந்நகரின் சிறப்பைக் குறிக்கின்றன.

பூம்புகாருக்கு, சம்பாபதி என்பது பழைய பெயர். சம்பு அல்லது சம்பாபதி என்பவள் அந்நகரின் தெய்வம். காந்தன் என்ற சோழ மன்னனின் வேண்டுதலுக்கேற்ப காவிரிப்பாவை அந்நகரிலே தோன்ற, அவளை சம்பாபதி வரவேற்றாள். அத்தெய்வத்தை, காவிரி தொழுதாள் எனப் பெயர் பெற்ற இம்மூதூர் இனி உன் பெயரால் அழைக்கப்படும், என்று சம்பாபதி கூற அந்நகர் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் பெற்றது என்று மணிமேகலை குறிக்கிறது. அரச குலத்தை அழித்து வந்த பரசுராமருக்குப் பயந்து காந்தன் என்ற சோழ மன்னன், காவற் கணிகையின் புதல்வன் ககந்தன் என்பவனை அந்நகருக்குக் காவலாக நிறுத்திச் சென்றான். ககந்தனால் காக்கப்பட்டதால் காகந்தி என்றும் இந்நகர் அழைக்கப்பட்டது என்பர்.

வட இந்தியாவில் பார்குத் என்ற இடத்தில் ஒரு பௌத்த ஸ்தூபம் இருந்தது. அப்பகுதியை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட சுங்க மன்னர்களின் காலத்தில் எழில் வாய்ந்த

சிற்பங்களால் அந்த ஸ்தூபம் செய்யப்பட்டது. அக்காலத்திய சிற்பங்களும், கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அங்கு கிடைத்த ஒரு கல்தூண், காகந்தி நகரைச் சேர்ந்த **“சோமா”** என்ற பிக்குணியால் தானமாக அளிக்கப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகிறது. காகந்தி என்பது பூம்புகாரின் மற்றொரு பெயர், கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே பூம்புகார் சிறந்த நகராக விளங்கியது என்பதற்கு இதுவே சான்று.

புகார் நகரைத் தூங்கெயில் எறித்த தொடித்தோட் செம்பியன், முசுகுந்தன், மனுநீதி சோழன், கரிகால் பெருவளத்தான், கிள்ளிவளவன் போன்ற சிறந்த சோழ மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலத்தில் இந்திர விழா சிறப்பாக நடத்தப்பட்டது. முசுகுந்த சோழன் ஒரு சமயம் அமரர்க்கு உதவி செய்தான். அப்போது அசுரரால் ஏற்பட்ட துயரை, பூதம் ஒன்று போக்கியது. அதனால் அப்பூதத்தை பூம்புகாரில் நாளங்காடியில் பிரதிட்டை செய்து வழிபட்டனர். கரிகாலன் காலத்தில், பூம்புகார் நகர் சிறப்பாக விரிவாக்கப்பட்டது எனலாம்.

**பூம்புகாரை ஆண்டவர்கள்**

சங்க கால முடிவு வரை (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை சங்க காலம்) என வரையறுக்கப்படுகின்றது.

- **கி.பி. 4க்கு முன் - சோழர்**
- **கி.பி. 4 முதல் 5 - ஆம் நூற்றாண்டு வரை - களப்பிரர்**
- **கி.பி. 6 முதல் 9 -ஆம் நூற்றாண்டு வரை - பல்லவர்**
- **கி.பி. 9 முதல் 13 -ஆம் நூற்றாண்டு வரை - சோழர்**
- **கி.பி. 13 முதல் 14 -ஆம் நூற்றாண்டு வரை - பாண்டியர்**
- **கி.பி. 15 முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை - விஜயநகர் - நாயக்க மன்னர்கள்**
- **கி.பி. 18 முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை - தஞ்சை - மராட்டியர்**
- **கி.பி. 19 முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை - ஆங்கிலேயர்**
- **கி.பி. 1947 முதல் - சுதந்திர தமிழகம்**

**பூம்புகார் நகரம்**

நகரமைப்புக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது பூம்புகார் நகரம். இந்நகரின் பொற்காலம் முடிந்து இது கடல் கொள்ளப்பட்டுவிட்டது என்றாலும் வரலாற்றிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் இதன் அமைப்பையும் பெருமையையும் நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை முதலிய நூல்களில் இதன் சிறப்பு நன்கு தெரிகின்றது. கி.பி. முதல் நூற்றாண்டில் மேற்கு நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தவர்களாலேயே காவிரிப்பூம்பட்டின நகரம் பெயர்சுட்டிப் புகழப்பட்டிருக்கிறது.

யவன ஆசிரியராகிய தாலமி என்பவர் எழுதிவைத்துவிட்டுச் சென்றுள்ள வரலாற்றுக் குறிப்பில் இது உள்ளது. அந்நாளைய மேனாட்டு வரலாற்று ஆசிரியர் ஒருவர் எழுதிய பெரிப்ளுஸ் என்னும் நூலிலும் காவிரிப்பூம்பட்டினம் புகழப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் இந்நகரை ஆட்சிபுரிந்த கரிகால்வளவன் என்னும் பேரரசன் காலத்தில் முழுப் பெருமையோடு வீறுபெற்றுவிளங்கிய இந்நகரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் லண்டன் மாநகரம் எப்படி விளங்கியதோ அதைவிட ஆயிரம் மடங்கு சிறப்பாக விளங்கியதாக நாம் கூறலாம் என்கிறார் வரலாற்று ஆசிரியர்கள் சதாசிவ பண்டாரத்தார்.

இவற்றிற்கெல்லாம் காரணம் இந்நகரின் அமைப்பேயாகும். **"முட்டாச் சிறப்பிற் பட்டினம்"** என்று கடியலூர் **உருத்திரங்கண்ணனார்** பூம்புகாரைப் புகழ்கிறார். கடல்வாணிகச் சிறப்பால் அன்றைய பூம்புகார் ஒரு பன்னாட்டு நகரமாகவும் (ஐவெநசயெவழையெட உவைல) விளங்கியதோடு இந்நகருக்குப் பல பெருமைகளும் இருந்துள்ளன.

இந்நகரத்திற்குச் செல்லும் பிரதானசாலை சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் பட்டினப்பெருவழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினப் பெருநகர் மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன,

- மருவூர்ப்பாக்கம்
- பட்டினப்பாக்கம்
- நாளங்காடி

இந்த மூன்று பிரிவுகளும் அடுத்தடுத்து அமைந்திருந்த விதம் நகரமைப்பின் பண்பட்ட நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையக்கூடியது ஆகும். மருவூர்ப்பாக்கம் புகார் நகரின் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதி. அகநகராக உட்புறம் அமைந்திருந்த பகுதியே பட்டினப்பாக்கம். இந்த இரண்டு பாக்கங்களுக்கும் இடையில் இருந்த இடம் நகரத்தின் வணிகப் பகுதியாக (உழஅஅநசஉயைட யசநய) அமைந்திருந்தது. அதற்கு நாளங்காடி என்று பெயர். அல்லங்காடி என மற்றொரு பகுதியும் இருந்திருக்கிறது. இது சோலை சூழ்ந்த பகுதியாகும். காவிரிப்பும்பட்டினத்தின் முழுப்பகுதியும் இம்மூன்று பெரிய பிரிவுகளுள் அடக்கிவிடும்.

**ஐவகை மன்றங்கள்**

மன்றம் என்ற சொல் ஊர் நடுவே பலரும் கூடும் பொது இடம் எனப் பொருள். பட்டினப்பாக்கப் பகுதியில் காவிரிப்பூம்பட்டின நகரத்தின் ஐம்பெரும் மன்றங்களும் அமைந்திருந்தன. இம்மன்றங்கள் நகரின் பொது மக்கள் கூடுமிடங்களாக அமைந்திருந்தன என்று தெரிகிறது.

அவையாவன,

- வெள்ளிடை மன்றம்
- இலஞ்சி மன்றம்
- பூத சதுக்கம்
- நெடுங்கல் நின்ற மன்றம்
- பாவை மன்றம்

மயமதம் கூறும் நகரமைப்புக்கலை இலக்கணப்படி மொத்தச் சுற்றளவில் 20 இல் ஒரு பாகம் **'குடும்ப பூமி'** என்ற பெயரில் குடியிருப்பாளர்களுக்கும் பிற பகுதிகள் தோட்டங்கள், நீர் நிலைகள், இளமரக்காக்கள் ஆகியவற்றக்கும் ஒதக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. பூம்புகார் நகரிலும் இவ்வமைப்பு இருந்திருப்பதைக் காணமுடிகிறது. நாளங்காடிச்சோலை, காவிரி நீர்ப் பெருக்கு இவை தவிரவும் நீர்நிலைகள், வனங்கள் சோலைகள் ஆகியனவும் பூம்புகாரில் இருந்துள்ளன.

**கோயில்கள்**

காவிரிப்பூம்பட்டின நகரின் அமைப்பில் பல்வேறு கோயில்கள் இருந்திருக்கின்றன. அவை கோட்டங்கள் என்று வழங்கப்படுகின்றன. அவை: சிவன் கோட்டம், திருமால் கோட்டம் பலராமன் கோட்டம், இந்திரன் கோட்டம், முருகன் கோட்டம், சூரியன்

கோட்டம், சந்திரன் கோட்டம், புத்தர் கோட்டம். அருக தேவன் கோட்டம். எனப் பல கோட்டங்கள் காணப்படுகின்றன. இதனைச் சிலப்பதிகாரம் **“அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்…………”** (சிலப்பதிகாரம் **43)** எனக் கூறும். அத்துடன் இந்திர விகாரம் ஏழு, மணிவண்ணன் கோட்டம், சக்கரவாளக் கோட்டம் என கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகளும் கிடைக்கின்றன.

**துறைமுகம்**

கிழக்குப் கடற்கரையில் மிகப் பெரிய துறைமுக நகரமாகவும் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியுள்ளது. கடல் வழியே வரும் மரக்கலங்கள் கரையளவும் உள்ளே வந்து பண்டங்களை ஏற்றிச் செல்லவும் இறக்வும் வாய்;ப்புள்ள இயற்கைத் துறைமுகமாக விளங்கியிருக்கின்றது . நகரமைப்பில் இது ஒரு சிறப்பம்சம்.

**“கூம்பொடு மீப்பாய் களையாது …”** (புறநானூறு 30:11:13)என்னும் புறநானூற்றுப் பாடற்பகுதியிலிருந்து பல நாட்டுப் பண்டங்களை நிறைய ஏற்றிக் கொண்டு இத்துறைமுகத்தை நோக்கி வரும் பெரிய கப்பல்கள் பாய் மரங்களைக் கூடத் தாழ்த்தாமல் இந்கரத்தின் கரையை அணுகிச் சரக்குகளை எளிதில் இறக்கியசெய்தி தெரிய வருகிறது. நகரமைப்பின் இத்துறைமுக வசதி கடல் வாணிபத்திற்குப் பெரிதும் துணையாய் அமைந்துள்ளது.

இரவில் திசையறியாது செல்லும் மொழி வேறுபட்ட தேசத்தாருடைய மரக்கலங்களை உரிய திசைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் இந்நகரில் இருந்திருக்கின்றது. பூம்புகார் நகரமைப்பை பற்றி அறிஞர் “சாமி சிதம்பரனார்” பட்டினப்பாலையில் மிக விரிவாக எடுத்துரைத்துள்ளதனையும் காணலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த காவிரிப்பூம்பட்டினம் சுகாதாரம் நிலவுவதற்கான எல்லா அமைப்புக்களையும் கொண்டிருந்ததென்ற உண்மையைப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகின்றது. பெரிய மாடங்களின் ஒளி விளக்குகளைக் கண்டபடி கடலுள் புறப்படும் மீனவர் கதிரவன் எழுச்சியை நோக்குவர் என்கிறார். உருத்திரங்கண்ணனார்.

**சமய நூல்களில் பூம்புகார்.**

**“நுதன் விழிநாட்டத்திறையோன் முதலாப் பதி வாழ் சதுக்க பூதம் ஈறாக”** எல்லாக் கடவுளர் கோயிலும் இருந்த பூம்புகார் நகரில் பல்வேறு சமயத்தாரும் வாழ்க்கை நடத்தினர். பௌத்த, சமண சமயத்தைச் சார்ந்தோரும், இந்து மதத்தின் இருபெரும் உட்பிரிவுகளான சைவ, வைணவப் பெரியோர் வழிவந்தோரும் ஒருங்கே வாழ்ந்த காலம். ஆதலின் சமயச் சார்புடைய நூல்களில் புகார் நகர் பற்றியும், அந்நகரில் எழுந்தருளியுள்ள தத்தமது சமயக் கோயில்கள் பற்றியும், மக்களது சமயவாழ்க்கை பற்றியும் குறிப்புகள் உள்ளன.

சைவ சமயக் குரவர்களான அப்பரும், சம்பந்தரும் புகார் நகரத்து எழுந்தருளியுள்ள இறைவனைத் தங்கள் பதிகங்களில் பெருமைப்படுத்தியுள்ளனர். திருஞானசம்பந்தர் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தைப் பதிகங்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். **“சுழியிலாருங் கடலிலோ தந்தெண்டிரை ………** " என்றும் **“காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்……”** என்றும் **“வங்கமாரு முத்தமிப்பிவார் கடலூடலைப்பப்**………." எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், **“பட்டினத்துப் பல்லவனீச்சரம்”** என்றும் **“பட்டினத் துறைப் பல்லவனீச்சரம்”** என்றும் இவ்வூர் அழைக்கப்பட்டது.

புகாரில் அமைந்துள்ள திருச்சாய்க்காட்டைப் பற்று சம்பந்தர் **“வாய்த்த மாளிகை சூழ் தருவண்புகார்மாடே………”** (தேவாரம் **4:81.2)** எனும் பாடல் வரிகளில் விவரிக்கிறார். திருச்சாய்க்காட்டுறை இறைவனை அப்பர்பிரான் தன்னுடைய **“மத்த யானையின் கோடும் ……………”** எனும் பதிகத்தில் குறித்துள்ளார். இதனூடாக, யானைத்தந்தமும், மயில்பீலியும் இங்கு சிறப்பாகக் கிடைத்துள்ளன. இவை பண்டைய காலத்தில் சிறந்த வியாபாரப் பொருள்களாகத் திகழ்ந்தன. அதேபோன்று முத்து, மணி, சங்கு முதலியவையும் இங்கு நிறைந்திருந்தன எனப் பாடுகிறார்.

இயற்பகையார் புகாரில் பெயர் பெற்ற வணிகர் ஒரு நாள் இறைவன் சோதிக்க எண்ணி வேதியராய் மாயவண்ணம் கொண்டு, புகார் நகரில் வாழும் அவ்வணிகர் முன் தோன்றி ஒரிரவு அவர் மனையாளை வேண்டி நின்றார். மறையவரின் விருப்பத்திற்கிணங்கிய இயற்பகையார் தன் இல்லக்கிழத்தியை அவர்க்களித்து, வாள் ஏந்தி காவல் நின்றார். இச்செய்தியறிந்த ஏனைய சுற்றத்தார் இயற்பகையைப் பழித்த போது இயற்பகை அவர்களை வென்றார். தன்னுடைய காவலுடன் மறையவரையும் தன் மனையாளையும் சாய்க்காட்டில் விட்டு மீண்டபோது, இறைவன் அவரைத் திரும்ப அழைத்து விடைமேற் காட்சி அளித்தார். பின்பு ஈசனின் பெருந் திருவடி நிழலில் அவ்விருவரும் அடைக்கலமாயினர்.

திருஞானசம்பந்தர் பூம்புகார் வருகைபுரிந்து அப்பகுதிக் கோயில்களைப் பாடியுள்ளார் என்பதைத் திருதொண்டர் புராணம் உறுதிசெய்கிறது. திருச்சாய்க்காட்டுப் பெருமான் பல்லவனீச்சரத்து உறைபவர் ஆகியோர் பற்றிப் பாடியதாக பின்வரும் வரிகள் கூறுகின்றன. **“நிறை புனல் திருச்சாய்க்காடு தொழுதற்கு நினைந்து செல்வார்…….”** அப்பர், சம்பந்தர் இருவரும் புகாரின் அருகமைந்த ஆக்கூர் தலத்திற்கு வருகை புரிந்து அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஈஸ்வரனைப் பாடியதை திருத்தொண்டர் புராணம் உறுதி செய்கிறது. **“தேர் மன்னும் மணி வீதித் திருவாக்கூர் சென்றணைந்தார்……”.** பூம்புகாரில் ஒரு பகுதியாக விளங்கிய நாங்கூர் ஊரைப் பற்றி வைணவப் பெரியாராகிய திருமங்கை ஆழ்வார் தம் பாசுரங்களில் புகழ்ந்துரைக்கிறார். திருநாங்கூர் மறையோர்கள் வாழ்ந்த தலம் பெரும் செல்வந்தர்கள் தங்களது கொடையால் அணி செய்த நகரம். பல்கலைகள் நன்கு வளர்ந்த இடமாகும். திருநாங்கூர் மணிமாடக் கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம் பற்றிய பாசுரங்களில் இவ்வூர் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது. **“முறையால் வளர்க்கின்ற முத்தீயர், நால்வேதர்…………”** பிற்காலக் கல்வெட்டுகளில் காவிரிப்பூம்பட்டினம் நாங்கூர் நாட்டின் ஒரு பதியாகத் திகழ்ந்தது. இதனை **நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்** எனற தொடர் உறுதி செய்கிறது.

**பூம்புகார் அழிந்தமைக்கான காரணங்கள்**

நாகை மாவட்டம் பூம்புகார் அருகே சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலில் மூழ்கிய ஒரு பிராமாண்ட நகரம் தான் உலகில் முதன் முதலில் தோன்றிய நவீன நகர நாகரிகமாக இருக்கக்கூடும் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கிரஹாம் ஹான்காக் என்பவர் கண்டறிந்துள்ளார். இவர் கடந்த 2001 ஆம் ஆண்டு. பூம்புகார் கடற்பகுதியில் மேற்கண்ட தீவிர ஆழ்கடல் ஆராய்ச்சியின் மூலம் இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளார். இந்த ஆராய்ச்சிக்குத் தற்போதைய வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தான "மெசபடோமியா' (தற்போதைய ஈராக்) பகுதியில் சுமேரியர்களால் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நகர நாகரிகம் தோற்றுவிக்கப்பட்டது என்பது தவறானது எனத் தெரிவிக்கிறது.

இவரது பல கண்டுபிடிப்புகள் வரலாற்று உலகில் முக்கியமானவை. இந்திய அரசின் கட்டுப்பாட்டில் கோவாவில் அமைந்துள்ள **“தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சிக் கழகம்”** என்ற

நிறுவனம். கடந்த 1990ஆம் ஆண்டு வாக்கில் வரலாற்றுப் புகழ் பெற்ற பூம்புகார் நகர கடற்பகுதியில் ஒரு ஆய்வினை மேற்கொண்டது. இந்த மூழ்கிய நகரம் குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்த ஹான்காக் இந்த நகரம் கடலில் சுமார் 75 அடி ஆழத்தில் புதையுண்டிருப்பதைக் கண்டறிந்தார். இன்றைக்கு சுமார் 17 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு **"ஐஸ் ஏஜ்"** எனப்படும் பனிக்கட்டி காலத்தின் இறுதி பகுதியில் தட்பவெப்ப மாறுதல்கள் காரணமாக, பனிப்பாறைகள் உருகியதன் விளைவாக பல நகரங்கள் கடலுள் மூழ்கியதாக வரலாறு தெரிவிக்கின்றது. **(Graharm Honcock, 2002)**

இத்தகைய பனிக்கட்டி உருகும்நிலை, சுமார் 7 ஆயிரம் ஆண்டுகாலம் தொடர்ந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. பூம்புகார் அருகில் இருந்த இந்நகரம், சுமார் 75 அடி ஆழத்தைப் புதையுண்டு இருப்பதைப் பார்க்கும்போது, இந்த நகரம் சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கியிருக்கக் கூடும் என்று ஹான்காக் கருதினார். தனது ஆராய்ச்சியைப் பற்றி விபரங்களை அவர் இங்கிலாந்து நாட்டு மில்னே என்பவரிடம் தெரிவித்தார். அதன்மீது ஆராய்ச்சி மேற்கொண்ட கிலன்மில்னே, ஹான் காக்கின் கருத்து சரிதான் என உறுதிப்படுத்தினார். சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல்மட்டம் 75 அடி உயர்ந்திருக்கக் கூடும் என்றும். அதனை வைத்துப் பார்க்கும்போது இந்த நகரம் 11 ஆயிரத்து 500 ஆண்டுகால பழமை வாய்ந்தது என்ற முடிவினையும் அறிவித்தார்.

2016-ல் நாமறிந்த ஆழிப்பேரலையான சுனாமி, அதற்கு முன்னால் பலமுறை உலகின் பல கடற்கரை நகரங்களை அழிவடையச் செய்திருக்கிறது என்பது வரலாற்றுத் தகவல், நம்முடைய சங்க இலக்கியத்திலும், வரலாற்றிலும் மிகப்பெரிய வணிகநகராக இருந்த பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினமும் அப்படி ஒரு கடல்கோளால்தான் அழிந்திருக்கிறது. அதை வரலாற்றாய்வாளர்கள் பலரும் பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

பூம்புகார் நகரின் கடற்கரையில் உப்பளத்தின் அருகே மணற்குன்று ஒன்றில் இருந்த மன்னன் கிள்ளிவளவனைப் பார்த்து, பாணர் ஒருவர், -- உன் மாநகர், கடல் வயிறு கூடம் (24: 62-65) என்று எச்சரித்ததாக, மணிமேகலையின் பாட்டி சித்திராபதி, இராசமாதேவியிடம் கூறுகிறார். இந்தக் குறிப்பு ஆபுத்திரன் நாடு அடைந்த காதையில் காணப்படுகிறது. தொடந்து, மணிபல்லவத் தீவுக்கு ஆபுத்திரனோடு சென்ற மணிமேகலையிடம், அத்தீவிலிருந்த புத்தபீடிகையை காத்துவந்த தீவதிலகை பலர் தொழு பாத்திரம் கையில் ஏந்திய மடவரல் நல்லாய் நிந்தன் மாநகர் கடல் வயிறுபுக்கது (மணிமேகலை 125: 174-175) என்றும், **“வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது”** (மணிமேகலை **25.197)** என்றும், **“விரிதிரை வந்து வியன் நகர் விழுங்க, ஆய் இழைத் தாயரும் வருந்தாது ஏகி. வஞ்சியுள் புக்களர்"** (மணிமேகலை **25: 203-206)** என்றும், கூறுகிறார்.

இவை ஆபத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதையில் வருகின்றன. இதை அடுத்து, வஞ்சி மாநகர் சென்று அங்கே தவ வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் தன் தாத்தா மாசாத்துவானை பார்க்கும் மணிமேகலை, **“மாநகர் கடல் கொள, அறவண அடிகளும் தாயாரும்…….”** (சிலம்பு - 28:79-82). இதற்கு பதிலளிக்கும் மாசாத்துவான் **"காவிரிப்பூம்பட்டிணம் கடல் கொள்ளும்"** (சிலம்பு **28: 1.35)** என அறிந்தே தான் அங்கே செல்லாமல் வஞ்சியிலே தங்கிவிட்டதாகக் கூறுகிறார்.

இக்காட்சிகள் 'கச்சி மாநகர் புக்க காதையில்' காணக்கிடைக்கின்றன. இதைத் தொடர்ந்து வரும் 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில், வஞ்சிநகர் வந்து தன்னை வணங்கிய மணிமேகலையிடம் அறவண அடிகள், நகர் கடல் கொள்ள, நின் தாயரும் யானும் - இப்பதி படர்ந்தனம் (129:35-36) என்று கூறுவதாக, சாத்தனார் சுட்டிக்

காட்டுகிறார். இதுவரை எடுத்துக்காட்டிய மேற்கோள்களிலிருந்து, சீத்தலை சாத்தனார் வாழ்ந்த காலத்திலோ அல்லது அதற்கு சற்று முன்போ, காவிரிபூம்பட்டினத்தைக் கடல் கொண்டது என்று எண்ணத் தோன்றுகிறது. மணிமேகலையின் கதையை அல்லது வரலாற்றை கூற வந்த சாத்தனார், அந்தக் கடல்கோள் நிகழ்வை கதையோடு இணைத்துக் காப்பியத்தை பாடியிருக்கின்றார். கதை நிகழ்ந்த காலகட்டத்தில் நிலவி வந்த நம்பிக்கைகளுக்கேற்ப இந்திரன் இட்ட சாபத்தின் காரணமாக கடல் கோள் நிகழ்ந்தது என்று காப்பியத்தின் பல பாகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சங்க காலத்திலும் இரட்டைக் காப்பியங்கள் எழுந்த காலத்திலும்,

சிறந்த துறைமுக நகரமாகவும், மிகச் சிறந்த வணிகப் பெருநகரமாகவும் திகழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு பற்றிய குறிப்புகள், அதன் பின் தோன்றிய இலக்கியங்களில் அவ்வளவாக இல்லை ஆதலின், மணிமேகலை காப்பிய காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடலுக்கு இரையானது என எண்ண இடம் உள்ளது. அந்தப் பட்டினம், துறைமுக நகரமாக இருந்தது என்பதற்குத் தற்போது கிடைக்கும் தொல்லியல் ஆய்வுத் தடயங்கள் சான்று பகர்கின்றன. சாத்தனார் சொல்லும் கடல்கோள் திடீரென வந்து காவிரிப்பூம்பட்டிணத்தை விழுங்கியுள்ளது; ஆதலின், உலகளாவிய ஹோலோசீன் கடல்மட்ட உயர்வால் இது நடந்திருக்க இடமில்லை. புயல் காற்றில் எழும்பிய அலைகளோ அல்லது சுனாமி அலைகளோ தான் பட்டினத்தை அழித்திருக்கும். புயற் காற்றோ அல்லது சூறாவளியோ வீசியிருந்தால் அதுபற்றிய குறிப்பு நிச்சயமாக காப்பியத்தில் இடம் பெற்றிருக்கும்.

மணிமேகலை ஆசிரியர் சீத்தலை சாத்தனார் இயற்கை வருணனையில் மிக வல்லவர். காப்பியத்தின் பல்வேறு காதைகளில் அவர் படம்பிடித்துக் காட்டும் இயற்கை வனப்புகள் கற்போர் மனதை சொக்க வைப்பன். காப்பியத்தில் புயற்காற்று பற்றிய குறிப்பு சிறப்பாக ஒன்றும் இல்லையாதலின், காவிரிபூம்பட்டினத்தின் அழிவு சுனாமியால் ஏற்பட்டதோ என எண்ண இடம் உண்டு. (இது ஒரு ஊகம்தான் Pயடயநன ஆய்வுகள் மேற்கொண்டால்தான் இதை நிறுவ முடியும்). இந்த இடத்தில் நாம் கலித்தொகை வரிகளை மணிமேகலை வரிகளுடன் ஒப்பு நோக்குவோம். கலித்தொகையில் **“மலிதிரை ஊர்ந்து மண் வெளவியது………”** (கலித்தொகை – 5) மேகலையில் **“விரிநிரை வந்து வியன் நகர் விழுங்கியது."** என மணிமேகலை சொல்வதன் மூலம், நகரை விரிதிரை விழுங்கியபோது, சில உயிரிழப்புகள் நிகழ்ந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது கலித்தொகையில் உயிரிழப்பு பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை, இப்படி, சுனாமிக்கு ஆதாரமாக மணிமேகலையில் இன்னும் நிறையவே சான்றுகள் உள்ளன. ஆதலால், சுனாமி பேரலையாலேயே புகார் நகரம் கடல்கொள்ளப்பட்டிருக்கும் என்ற முடிவுக்கே வரமுடிகிறது.

ஆகவே இந்நகரங்கள் இயற்கையின் சீற்றத்தினால் அதாவது, கடல்கோள், வரட்சி போன்றவற்றின் காரணத்தினாலேயே அழிந்துள்ளது என்பது தெரியவருகின்றது. இனிவரும் காலத்தில் தொழிநுட்ப பயன்பாட்டைக் கொண்டு கடல் ஆராய்ச்சிகள் செய்யும் போது, இந்நகரங்களை அண்டிய கடல்கள், கடற்கரையோரங்கள், ஆழ்கடல் பாறைகள், மண், கடல்தாவரங்களை ஆய்வு செய்தால் மட்டுமே உண்மையான காரணங்கள் வெளியே தெரியவரும். ஓர் நகரம் அழிந்துவிட்டது என அப்படியேவிட்டால் அதிலிருந்து எமது பண்பாடும் அழிந்துவரும். அதை தேடினாலே உண்மையான வரலாறுகள் வெளிக்கொணரப்படும் என்பது ஆய்வாளனாக எனது தனிப்பட்ட கருத்தாகும்.

**பூம்புகார் அகழாய்வு தொல்லியல் சின்னங்கள்**

பூம்புகாரில் மேலையூர், பிரியாவிடங்கர் கோயில் அருகில் நடந்த அகழாய்வு சாயாவனம் காளியம்மன் தோப்பு, மணிக்கிராமம், கிழார்வெளி, வானகிரிதோசக்குளம் ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்ட இடங்களிலிருந்து கிடைத்த கருப்பு – சிவப்பு பானை ஓடுகள், ரோமானிய ரெளலட்டட், அரிட்டைன் பானை ஓடுகள் ஆம்போரா கெண்டிமூக்குகள், அடுப்பின் பகுதி, சுடுமண் புத்தர் பாதம். புத்தர் தலைப்பகுதி, கண்ணாடி மற்றம் பீங்கான் ஓடுகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

**கருங்கல் சிற்பங்கள்**

- **ஐயனார் கற்சிற்பம்**

இச்சிற்பம் நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளம் என்ற ஊரில் சேகரிக்கப்பட்டதாகும். அய்யனார் சிலை செவ்வக வடிவான பீடத்தின் மீது இடது காலை மடித்து வைத்து, வலது காலைக் குத்திட்டு அமர்ந்த நிலையுடன் காணப்படுகிறது (படம் - 3). வலது கரம் வலது காலின் மீதுவைத்து தொங்கும் கரமாக உள்ளது. இடது கரம் உடைந்துள்ளது. கழுத்தில் பதக்கமும், மார்பில் புரிநூலும், வயிற்றில் உதிரபந்தமும், கையில் காப்பும், தோளில் கேயூரமும் அணிசெய்கின்றன. தலைப்பகுதி விரிசடையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 96 செ.மீ, அகலம் 40 செ.மீ ஆகும். இச்சிற்பத்தின் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டாகும். முற்காலச் சோழர் கலைப்பாணிக்கு இச்சிற்பம் சிறந்த எடுத்தக் காட்டாக விளங்குகிறது. (படம் – 1)

- **விநாயகர்**

விநாயகர் சிற்பம் பூம்புகாரில் கடற்கரைப்குதியில் சேகரிக்கப்பட்டதாகும் இச்சிற்பம் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இது இடம்புரி விநாயகர் . இச்சிற்பத்;தின் உயரம் 69 செ.மீ. அகலம் 45 செ.மீ. காலம் கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர் கலைப்படைப்பாகும். இச்சிற்பம் மங்கிய வெள்ளைநிறக் கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **விசுவாமித்திரர் - மேனகைச் சிற்பம்**

பூம்புகாரைச் சேர்ந்த திரு.எம்.கணேசன் என்பவர் அன்பளிப்பாக அகழ்வைப்பகத்திற்கு அளித்துள்ளார். கோ.முத்துசாமி இதனைச் சேகரித்துள்ளார். விசுவாமித்திரர் தவம் இருந்தபோது, தவத்தைக் கலைப்பதற்கு அனுப்பப்பட்டவள் சொர்க்கலோகத்து அழகியான மேனகை. மேனகையின் இரண்டு கரங்களும் விசுவாமித்திரரின் தோளின் மீது வைத்து, முகத்தை விசுவாமித்திரரின் முகத்தில் முத்தம் கொடுக்கும் பாவனையில் கட்டி அணைத்தபடி உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. மேனகையின் வலது கால் விசுவாமித்திரரின் இடுப்பின் மீது வைத்துள்ளது. மேனகையின் தலைமுடி கீழே இடுப்பவரை தொங்குகிறது. மார்பகங்களில் கச்சை கட்டப்படாமல் நிர்வாண நிலையில் மேனகையின் உருவம் காட்டப்பட்டுள்ளது. விசுவாமித்திரர் மேனகையின் உருவம் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 32 செ.மீ அகலம் 16 செ.மீ. 100 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

**மரச்சிற்பங்கள்**

- **காமதேனு கடல்கன்னி**

இச்சிற்பம் பூம்புகார் கடலில் மிதந்து வந்தள்ளது. இதனை மீனவர் திரு.மருதமுத்து என்பவர் எடுத்த வந்து அகழ்வைப்பகத்திற்கு அன்பளி;ப்பாக அளித்துள்ளார். கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சதுரவடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் முழு பெண் உருவமாக காட்டப்பட்டுள்ளது. தோள்முதல் பாதம் வரை வரிவரியான ஆடை அணிந்துள்ளது. தலையின் மேற்பகுதி பசுமாட்டின் தலை காட்டப்பட்டுள்ளது. மாட்டின் மூக்கு மூக்கணாங் கயிறுடன் அமைந்தும் தலையின் நெற்றியில் அழகான பொட்டு வடிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் காதுகள் பசுமாட்டின் காதுகளாக உள்ளன. பசுமாட்டின் கழுத்தில் மணிமாலை கட்டப்பட்டுள்ளது. பெண்ணின் தலைமுடி பின்புறத்தில் தொங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கரங்களும் உடைந்து விட்டன. பெண்ணின் தலைமீது பசுமாட்டின் தலை உள்ளதால் காமதேனு உருவம் என்றம் கருதலாம். இந்திய நாட்டின் கலாசாரத்தை சீன நாட்டவர்களும் பின்பற்றவது இந்த சிற்பத்தின் மூலம் தெரியவருகின்றது. உயரம் 45 செ.மீ. அகலம் 13 செ.மீ ஆகும். இது சீனநாட்டைச் சேர்ந்த சிற்பமாகும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

- **அம்மன்**

இச்சிற்பம் பூம்புகாரில் கிடைத்ததாகும். அம்மன் வட்ட வடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறது. வலது கரம் தொங்கும் கரமாகவும், இடது கரம் அபயமுத்திரையிலும் காணப்படுகிறது. மார்பில் கச்சை கட்டப்பட்டுள்ளது. கழுத்தில் ஆரமும், மற்றொரு பெரிய ஆரமும் அணி செய்கின்றன. தலையில் கொண்டை இடதுபுறம் கட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 45 செ.மீ.அகலம் 13 செ.மீ. இச்சிற்பம் சுமார் 100 ஆண்டுகள் பழமையானதாகும்.

### திருநீற்றுமாடம்

பூம்புகார் தருமகுளம் பகுதியில் சேகரிக்கப்பட்டது (படம் - 2). திரு.தண்டபாணி அய்யர் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்;. இது ஒரே மரத்தால் செய்யப்பட்டதாகும். மேற்பகுதி தொங்குவதற்கு வசதியாக ஒன்றொடொன்று இணைத்து சங்கிலி போல் அமைந்தும், கீழ்ப்பகுதி இரண்டு கிண்ணங்கள் போன்ற அமைப்பும் உள்ளன. உயரம் 62 செ.மீ. அகலம் 30 செ.மீ. சுமார் 200 ஆண்டுகள் பழமையானதாகும். மரச்சங்கிலியை யானை ஒன்று தனது தும்பிக்கையில் பிடித்திருப்பது போல் மேலே யானை உருவம் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே மரப்பலகையில் கோர்வையாக சிவச்சின்னங்களை நேர்த்தியாகச் செதுக்கியிருப்பது தமிழக மரத்தச்சரின் கலைத்திறமையை உணர்த்துகிறது. இது கல்வெட்டு ஆய்வாளர் கோ.முத்துசாமி பெருமுயற்சியுடன் அன்பளி;ப்பாகப் பெற்று இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டது.

### தாய்தெய்வ உருவங்கள்

நாகபட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மேலப்பெரும்பள்ளம் -வீராலி என்ற இடத்தில் கிடைத்த முதுமக்கள் தாழியின் வெளிபுறத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவங்களாகும் (படம் - 3). இவைகளைப் மேலப்பெரும்பள்ளம் புலவர்.ந.தியாகராசன் அவர்கள் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். இரண்டு தாய் உருவங்களில் ஒன்று வயதானதாகவும், மற்றொரு உருவம் இளமையாகவும் செய்யப்பட்டுள்ளது. காதுகள் இரண்டும் யானைக் காதுகள் போல் அகலமாக உள்ளன. மார்பகங்கள் இரண்டும் சரிந்து கீழே தொங்கும் நிலையில் வயதான தோற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கரங்களும் அகன்று, விரிந்து தொங்கும் நிலையில் உள்ளது.

கனுக்காலுக்குக் கீழே உள்ள பகுதிகள் உடைந்துள்ளன. மார்பகங்களில் கச்சை கட்டப்படவில்லை. இடுப்பில் தடித்த ஒட்டியாணம் அணி செய்கிறது. உயரம் 12 செ.மீ. அகலம் 8 செ.மீ. ஆகும். மற்றொரு பெண் உருவம் இளமையாக காட்டப்பட்டுள்ளது. தலையில் கொண்டை வலதுபுறத்தில் காட்டப்பட்டுள்ளது. மார்பகங்கள் இறுக்கமாக கச்சை அணிந்து இளமை தோற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இடது கரம் இடது புறம் இடுப்பின் மீது வைத்து காணப்படுகிறது. இப்பெண்ணின் தொடை பருத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது கரம் உடைந்துள்ளது. இடுப்பில் ஒட்டியாணம் காணப்படுகின்றது. உயரம் 13 செ.மீ. அகலம் 10 செ.மீ. இது கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்;.

## சிலம்பு

அரிய உலோகத்திலான சிலம்பு, சிலப்பதிகார நாயகி கண்ணகி காலத்தில் பெண்களால் அணியப்பெற்ற சிலம்பாகும் (படம் - 4). கொல்லம் கடற்கரையில் கிடைத்தது. அங்கு பாலம் கட்டுவதற்கு சென்ற பொறியிலாளர் திரு.தியாகராசன் என்பவர் கண்டெடுத்து வந்து பூம்புகார் அகழ்வைப்பகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். இச்சிலம்பின் சுற்றளவு 50 செ.மீ நீளம் 17 ½ செ.மீ அகலம் 14 செ.மீ எடை 4305 கிராம். சிலம்பின் முகப்பின் நடுவில் உயர்ந்த மேடாகவும் தலைப்பின் மேல் நான்கு இதழ்களுடைய மலர் போல அமைக்கப்பட்டுள்ளது. சுற்றி இரண்டு கோடுகள் வட்டமிட்டு அதன் நடுவில் பல புள்ளிகள் அமைக்கப் பெற்றுள்ளது. இதனைச் சுற்றி 25 சிறுசிறு வட்டவடிவங்கள் அமைக்கப்பெற்றுள்ளது. அதைச் சார்ந்து சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல் பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. அதைச் சார்ந்த சிலம்பின் வளைவில் இருபுறமும் இதேபோல பக்கத்திற்கு நான்காக எட்டு சிறு வடிவங்கள் அமைக்கப் பெற்றுள்ளது. உள்ளே பரல்கள் போடுவதற்கு ஏற்ற வகையில் கூடாக அமைந்துள்ளது. பரல்கள் உள்ளே இட்டு இணைத்தது போன்று காட்சி அளிக்கிறது. காலில் அணிவதற்கு ஏற்ற வகையில் வளைவான வடிவம் அமைக்கப் பெற்றுள்ளது. மென்மையான கனமற்ற உலோகத்தால் செய்யப்பட்டள்ளது. கீழே சின்ன சலங்கைகள் கட்டி தொங்கவிட மூன்று வளைவுகள் உள்ளன. கண்ணகி காலத்தில் அணிந்திருந்த சிலம்பு எப்படி அமைந்திருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது.

## முடிவுரை

இந்துசமயம் என்கின்ற பொழுது தென்னாசியாவை மையப்படுத்தி தோற்றம் பெற்றதுதான் இந்து சமயம். இந்து சமயத்தின் பண்பாடுகளை உள்ளடக்கிய பல நாகரிகங்கள் அழிந்து போயுள்ளன. அவ்வாறு அழிந்த பூம்புகார் நகரம் பற்றிய ஆய்வாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது. பூம்புகாரின் தற்கால நிலைமையை பற்றி இவ்வியலில் கூறப்படுவது. இங்கு கிடைத்த தொல்லியல் சின்னங்கள் நாகை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டு உள்ளது. மேலும் அறிவியலாளர்கள் பூம்புகாரின் ஆரம்ப காலகட்டத்தின் சரியான இருப்பிடம் அதன் வயதும், பின்னர் ஏற்பட்ட மாற்றல்கள், இடம்சார்ந்தது பரிணாம வளர்ச்சி, காவிரி நதியின் முகப்பில் உள்ள இடம் பற்றிய விடயங்கள் தொடர்பாக விவரங்கள் இன்றும் கிடைக்கப்பெறாமல் இருப்பதனால் அவற்றினை நீருக்கடியில் புகைப்படம் எடுத்தல் தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் வாகனத்திலிருந்து கடல்படுக்கை துளையிடுதல் போன்றவற்றின் மூலம் உண்மைத் தன்மையை ஆராயமுற்படுகின்றனர். மேலும் பூம்புகார் அழிவதற்கான காரணம் ஆராயப்படும் என அழகப்பா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தெரிவித்துள்ளது என்பவை இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலத்தின் தேவையினையும் இன்றைய காலகட்டத்தில் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மனித முக்கியத்துவத்தினையும் கருத்திற்கொண்டு வாழ்வின் பண்பாடுகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் எவ்வகையில் மக்களோடு ஒன்றித்து காணப்படுகின்றன என்பதற்கு நம்பகரமாணதோர் அம்சமாகக் காணப்படுவது இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களுமாகும். ஒவ்வொரு நகரமும் தனது பண்பாடுகள் வரலாற்று பாரம்பரியங்கள் மற்றும் கலாசார விழுமியங்களை நுணுக்கமாகவும் ஆழமாகவும் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது.

இன்று எம் மரபுகள், பாரம்பரியங்கள் சிதைக்கப்படும் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உண்மையான உறுதியான எமக்கான வரலாற்றை தெரிந்து கொள்ள அதற்கான களத்தை உருவாக்க வேண்டியது மிகமிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அழிவடைந்து செல்லும் இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களின் மூலம் இவ்வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையினை வெளிக்கொணர்தல், இவ் வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையானது தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் வெளிவரப்படாத மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இவ் மரபுரிமை சின்னங்கள் பேணி எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சமூகத்துக்கு எடுத்துக் காட்டுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

**பின்னிணைப்புகள்**




படம் - 1




படம் - 2




படம் - 3



**படம் - 4**

**உசாத்துணை**


1. அறுவர், (1973), தமிழ் நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை.
2. அப்பாத்துரைப்பிள்ளை,கே., (1941), திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. அன்புதேவா,கொ.அ, (1987), இந்தியாவின் போன்கார்-லேவின்,கி.ம, வரலாறு.
4. அருள்மொழி.ஈ.க.ஈ, (2008), பூம்புகார், ஆழ்கடல் அகழ்வைப்பகக் கையேடு
5. இராசமாணிக்கம்.மா, (1907), திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. இராஜவேலு.சு, திருமூர்த்தி.கே, (1995), தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை.
7. சொக்கலிங்கம்.கு, (2009), இந்து நாகரிகம்இ குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
8. தங்கமணி.கெ.டி.கே, (1988), “மணிமேகலை பற்றி” , நியு செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.
9. திருகூடசுந்தரம்.பொ, (1967), “சிலப்பதிகாரம்” , அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
10. நந்திவர்மன், (2010), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
11. பசாம்.A.L, (1963), “வியத்தகு இந்தியா, அரச கரும மொழி திணைக்களம் கொழும்பு.